| | |
|---|---|
| **அனுப்புநர்** | **பெறுநர்** |
| இணை இயக்குநர் (மேல்நிலை), | உதவி இயக்குநர்கள், |
| அரசுத் தேர்வுகள் இயக்ககம், | அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் |
| சென்னை - 600 006. | உதவி இயக்குநர் அலுவலகம். |

**ந.க.எண்.** 020840/எச்1/2023 **நாள்** : 27.12.2023

**ஐயா /அம்மையீர்,**

**பொருள்** : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை -6- மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு - மார்ச்/ஏப்ரல்-2024 மாற்றுத்திறனாளி பள்ளி மாணாக்கர்கள் – தேர்வு நேரத்தில் சலுகைகள் கோரும் விண்ணப்பங்கள் வரவேற்றல் – குறித்து.

**பார்வை** :
1. அரசாணை (நிலை) எண்.28, பள்ளிக் கல்வி(வி1) துறை, நாள்.10.02.2010.
2. அரசாணை (நிலை) எண்.2, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள்.07.01.2012.
3. அரசாணை (நிலை) எண்.268, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள்.19.10.2012.
4. அரசாணை (நிலை) எண்.62, பள்ளிக் கல்வி (அ.தே)த் துறை, நாள்.25.03.2022

-----

அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்களும், தங்களது ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும், மார்ச்/ஏப்ரல்-2024 மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு எழுதவுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் +2 மாற்றுத் திறனாளி மாணவர்களுக்குத் தேர்வெழுத சலுகை வழங்குதல் தொடர்பான கீழ்க்காணும் அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான அறிவுரைகள்**:

1. பார்வையில் கண்டுள்ள அரசாணைகளில், அரசுத் தேர்வுத் துறையால் நடத்தப்படும் மேல்நிலை பொதுத் தேர்வுகளை எழுதும் தேர்வர்களுள், கீழ்க்காணும் ஆறு வகைகளுக்குட்பட்ட மாற்றுத் திறனாளித் தேர்வர்களின் நலன் கருதி, பிற மாணவர்களுக்கு சமமாக அவர்களும் எவ்வித குறைகளுமின்றி தேர்வெழுதி மதிப்பெண்கள் ஈட்டுவதற்கு ஏதுவாக அவர்களுக்கு குறிப்பிட்ட சலுகைகளை தேர்வு நேரங்களில் வழங்க அரசு

அனுமதித்துள்ளது. (அரசாணைகளை அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளத்தில் (www.dge.tn.gov.in) காணலாம்)

2. மேற்குறிப்பிட்ட அரசாணைகளின்படி, பொதுத் தேர்வெழுதும் தேர்வர்களுக்கு உடல் குறைப்பாட்டின் அடிப்படையில் வழங்கப்படும் சலுகைகள் குறித்து தங்கள் பள்ளியில் +2 பயிலும் மாற்றுத் திறனாளி பள்ளி மாணவர்களுக்கு பள்ளி தலைமையாசிரியர் எடுத்துரைக்க வேண்டும்.

3. அரசாணைகளின்படி உடல் குறைபாட்டின் அடிப்படையில் தேர்வெழுத சலுகைகள் கோரும் மாணவரிடம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினை (படிவம்-1 ) வழங்கி, மாணவரிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம், மாற்றுத் திறனாளிக்கான அடையாள அட்டையின் நகல் அல்லது மருத்துவக் குழுவின் பரிந்துரைக் கடிதம் ஆகியவற்றை பள்ளித் தலைமையாசிரியர் பெற்றுக் கொள்ளவேண்டும். (**மருத்துவசான்றிதழில் நோயின் தன்மை மற்றும் மாணவருக்கு வழங்க வேண்டிய சலுகை பற்றிய விவரம் ஆகியவை கண்டிப்பாக இடம் பெற்றிருக்க வேண்டும்.மேலும், மருத்துவச்சான்றுகள் உரிய காலவரையறைக்குள் இருக்க வேண்டும்** ).

4. மேற்குறிப்பிட்டவாறு, மாற்றுத் திறனாளி தேர்வர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பபடிவங்கள் மற்றும் மருத்துவச் சான்றுகளை, பள்ளித் தலைமையாசிரியர்கள் 12.01.2024 தேதிக்குள் சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

5. மேற்குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது, அவ்வாறு தாமதமாக விண்ணப்பங்கள் பெறப்படின் சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்கள் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேற்குறிப்பிட்டவாறு தங்கள் ஆளுகைக்குட்பட்ட மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களிடமிருந்து பெறப்படும் மாற்றுத் திறனாளிக்கான விண்ணப்பங்களை சரிபார்த்து, தகுதியுள்ள தேர்வர்களின் சலுகை கோரும் விவரத்தினை இணைப்பிலுள்ள மாதிரிப் படிவத்தின் படி (Excel-ல், UNICODE (TAU-MARUTHAM) Font-ல்) தயாரித்து, "மேற்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள சலுகை கோரும் மாற்றுத்திறனாளித் தேர்வர்களது விண்ணப்பங்களையும், அவற்றுடன் இணைக்கப்பட்ட தகுதிச் சான்றுகளையும் நன்கு ஆய்வு செய்த பின்னரே

இயக்குநரிடம் பரிந்துரைக்காக அனுப்பப்படுகிறது'' என்ற சான்றொப்பமிட்டு, அப்பட்டியலை **(உரிய மருத்துவச் சான்று நகல் இணைப்புகளுடன்)**, வருகிற 22.01.2024-க்குள் அரசுத் தேர்வுகள் இயக்கக இணை இயக்குநர் (மேல்நிலை) அவர்களுக்கு அனுப்ப வேண்டும். மேலும், **அப்பட்டியலின் soft copy ஒன்றினை** dgeh1sec@gmail.com என்கின்ற இணையதள முகவரிக்கும் அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**ஒம்/-**

**இணை இயக்குநர் (மேல்நிலை)**

**இணைப்பு**

படிவம் 1, படிவம் 2 மற்றும் சலுகைப் பட்டியல்

**நகல்**

1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்

**படிவம் 1**

## மேல்நிலை இரண்டாமாண்டு 2023-2024 கல்வியாண்டிற்கான பொதுத் தேர்வு மாற்றுத் திறனாளி பள்ளி மாணவர்கள் - சலுகைகோரும் விண்ணப்பப் படிவம்

| | | |
|---|---|---|
| 1. | பெயர் மற்றும் பிறந்த தேதி | |
| 2. | வகுப்பு | |
| 3. | பள்ளியின் எண் மற்றும் பெயர் | |
| 4. | தேர்வு மைய எண் மற்றும் பெயர் | |
| 5. | பாடத் தொகுப்பு எண் | |
| 6. | தேர்வெழுதும் பாடங்கள் | |
| 7. | பயிற்று மொழி | |
| 8. | நோயின் தன்மை | |
| 9. | கோரப்படும் சலுகை | |
| 10. | மாற்றுத் திறனாளிக்கான அடையாள அட்டை அல்லது அசல் மருத்துவச் சான்று இணைக்கப்பட்டுள்ளதா? | |

**மாணவரின் கையொப்பம்**

**மாணவரின் பெற்றோரின் கையொப்பம்**

**மாணவரின் வகுப்புஆசிரியர் கையொப்பம்.**

**தலைமையாசிரியர் சான்றொப்பம்**

**( பள்ளிமுத்திரையுடன் )**

**குறிப்பு:இவ்விண்ணப்பத்துடன் மாற்றுத் திறனாளி அடையாள அட்டை நகல் அல்லது மருத்துவ சான்று கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும் (இரண்டுநகல்) மருத்துவச் சான்று இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

படிவம் 2

மேல்நிலை இரண்டாம் ஆண்டு 2022-2023 கல்வியாண்டிற்கானபொதுத் தேர்வு

– மாற்றுத் திறனாளிக்கான சலுகைகள்கோரும் தேர்வர்களது விவரப் பட்டியல்

வருவாய்மாவட்டம்:

| வ. எண் | கல்வி மாவட்ட எண் மற்றும் பெயர் | பதிவெண் | மாணவ / மாணவியர் பெயர் மற்றும் பிறந்த தேதி | தேர்வுமைய எண் மற்றும் பெயர் | தேர்வர் பயிலும் பள்ளியின் பெயர் | நோயின் தன்மை | கோரப்படும் சலுகை | பயிற்று மொழி | பாடத் தொகுப்பு எண் | தேர்வெழுதவுள்ள பாடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

உதவி இயக்குநரின் கையொப்பம்

## சுருக்கம்

பள்ளிக்கல்வி – அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நடத்தப்படும் பொதுத் தேர்வுகளில் கண் பார்வையற்ற, காது கேளாத மற்றும் வாய் பேச இயலாதோர், உடல் ஊனமுற்றோர், டிஸ்லெக்சியா குறைபாடுடையோர், மனநலம் குன்றியோர் மற்றும் நரம்பியல் கோளாறினால் பாதிக்கப்பட்டோர் தேர்வர்கட்கு வழங்கப்படும் சலுகைகளை தொகுத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி (வி1) துறை

அரசாணை (நிலை) எண்: 28

நாள்: 10.02.2010

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.1166/கல்வித் துறை நாள் 08.07.74.
2. அரசாணை (நிலை) எண்.464/கல்வித் துறை நாள் 12.03.75.
3. அரசாணை (நிலை) எண்1893/கல்வி அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் (வி1) துறை 24.08.1982.
4. அரசாணை (நிலை) எண்.770/கல்வித் துறை நாள் 15.06.1984.
5. அரசாணை (நிலை) எண்.270 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட துறை, நாள் 29.9.93.
6. அரசாணை (நிலை) எண்.289/சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டதுறை, நாள் 20.10.95.
7. அரசாணை (நிலை) எண்.47, பள்ளிக்கல்வி (வி1) துறை, நாள் 18.2.99.
8. அரசாணை (நிலை) எண்.149/சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டதுறை நாள் 13.8.99.
9. அரசாணை (நிலை) எண்.110, பள்ளிக்கல்வி (வி1) துறை, நாள் 17.7.03.
10. அரசாணை (நிலை) எண்.312, பள்ளிக்கல்வி (வி1) துறை, நாள் 28.12.07.
11. அரசு தேர்வுகள் துறை இயக்குநரின் கடித எண்.203552/பி1/09 நாள் 08.12.2009 மற்றும் 01.02.2010.

---

**ஆணை:**

அரசுத் தேர்வுகள் துறையால் நடத்தப்படும் மேல்நிலைத் தேர்வு எஸ்.எஸ்.எல்.சி., ஓ.எஸ்.எல்.சி, மெட்ரிக், ஆங்கிலோ – இந்தியன் மற்றும் ஈ.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வுகளில், உடல் ஊனமுற்ற, கண்பார்வையற்ற, காது கேளாத மற்றும் வாய்பேச இயலாத, எதிர்பாராத விதமாக கைமுறிவு ஏற்பட்ட, மனவளர்ச்சி குன்றிய மற்றும் டிஸ்லெக்சியா குறைபாடுள்ள மாணவர்கட்கு பின்வரும் வகையில் தேர்வெழுத சலுகைகள் வழங்கப்படுகின்றன.

| வ. எ | ஊனத்தின் தன்மை | அரசரணை விவரம் | வழங்கப்பட்ட சலுகைகள் |
|---|---|---|---|
| 1. | கண் பார்வையற்றோர் | அரசாணை(நிலை)எண் 1166/கல்வித்துறை, நாள் 08.07.1974 | தேர்வெழுத சொல்வதை எழுதுபவர் நியமனம். |
| 2. | காது கேளாத மற்றும் வாய் பேச இயலாதோர். | 1.அரசாணை(நிலை) எண்464/கல்வித்துறை நாள் 12.03.1976<br>2.அரசாணை(நிலை) எண்1893/கல்வி அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் (வி1) துறை நாள் 24.08.82 | இருமொழிப் பாடங்களில் ஏதேனும் ஒரு மொழிப்பாடம் தேர்வு எழுத விலக்கு அளித்தல் |
| 3. | எதிர்பாராத விபத்துகளால் உடல் ஊனமுற்று தேர்வு எழுத இயலாதோர் பாரிச வாயு போன்ற நோயால் பாதிக்கப்பட்டோர் மற்றும் எதிர்பாராத விபத்தி–னால் கைமுறிவு ஏற்பட்டோர். | அரசாணை(நிலை)எண் 770/கல்வி நாள் 15.06.1984 | தேர்வெழுத சொல்வதை எழுதுபவர் நியமனம். |
| 4. | மனநலம் குன்றியோர் | அரசாணை(நிலை)எண் 149/ சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை நாள் 13.8.1999,<br>அரசாணை(நிலை)எண் 289/சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 20.10.1995 | இருமொழிப் பாடங்களில் ஏதேனும் ஒரு மொழிப் பாடம் தேர்வு எழுத விலக்கு அளித்தல். |
| 5. | டிஸ்லெக்சியா குறைபாடு | அரசாணை (நிலை) எண் 47, பள்ளிக் கல்வி (வி1) துறை நாள் 18.02.1999<br><br>அரசாணை (நிலை) எண் 110, பள்ளிக் கல்வி (வி1) துறை நாள் 17.07.2003 | 1. செயல்முறை எழுத்துத் தேர்வுக்கு கூடுதல் நேரம்<br>2. கால்குலேட்டர் பயன் –படுத்துதல்.<br>3. வினாத்தாள் படிக்க ஆசிரியர் நியமனம்.<br>1. பள்ளியில் முறையாக பயின்றோ அல்லது பள்ளியில் முறையாக பயிலாமல் தனிப்பட்ட முறையில் ஆசிரியரிடம் சிறப்பு பயிற்சி பெற்று தனித் தேர்வராக பொதுத் தேர்வு எழுத அனுமதிக்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| | | | 2. ஒவ்வொரு தேர்வுக்கும் கூடுதலாக ஒரு மணி நேரம் அனுமதிக்கலாம்.<br>3.ஏதேனும் ஒரு மொழிப் பாடம் எழுதுவதிலிருந்து தவிர்ப்பு வழங்கலாம்.<br>4.யாரேனும் மொழிப்பாடம் இரண்டையும் சேர்த்து தேர்வுஎழுத விரும்பினால் அவர்களை அவ்வாறே தேர்வு எழுதவும் அனுமதிக்கலாம்.<br>5. பிற பாடங்களில் விடைத்தாட்களை திருத்தும் பொழுது எழுத்துப் பிழைக்கென மதிப்பெண் குறைக்காமல் பாடப் பொருளை மட்டும் கணக்கில் கொண்டு மதிப்பெண் அளிக்கலாம். இதற்கேற்ப தக்க பொதுவான அறிவுரை அரசுத் தேர்வுகள் இயக்குநர் வழங்கலாம். |
| 6. | நரம்பியல் கோளாறு | அரசாணை (நிலை) எண் 312 பள்ளிக் கல்வி(வி1) துறை நாள் 28.12.2007 | டிஸ்லெக்சியா குறைபாடுகள் உள்ள தேர்வர்களுக்கு வழங்கிய சலுகைகளுடன் கூடுதலாக கணினி மற்றும் வரைபடம் பயன்படுத்த அனுமதித்தல் |

2. அரசாணை (நிலை) எண்.270, சமூக நலத்துறை, நாள்.29.9.93ல் கூறப்பட்டுள்ள கூடுதல் நேரச் சலுகை அனைத்து உடல் ஊனமுற்றத் தேர்வர்களுக்கும் பொருந்தும் எனக் கூறி தொடரப்பட்ட வழக்கில், சென்னை உயர்நீதிமன்றம் W.P.No.4694 of 09 மற்றும் M.P.No.1 to 3 of 09-ல் வழங்கிய தீர்ப்பின்படி (நாள்.25.03.2009) மார்ச் 2009 பத்தாம் வகுப்பு தேர்வு முதல், பொதுத் தேர்வு எழுதும் கண்பார்வை குறைபாடுள்ள தேர்வர்கட்கு (Visually Handicapped) தேர்வு எழுதிட கூடுதலாக ஒரு மணி நேரம் அனுமதிக்கப்படுகிறது என்றும் மேற்படி உயர்நீதிமன்ற ஆணையில் "The Government is at Liberty to frame guidelines in this regard" என தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் கண்பார்வையற்றோர், காதுகேளாத மற்றும் வாய் பேச இயலாதோர், விபத்துக்களால் உடல் ஊனமுற்று தேர்வு எழுத

இயலாதோர், பாரிச வாயு போன்ற நோயால் பாதிக்கப்பட்டோர் மற்றும் மனநலம் குன்றியோருக்கு பொதுத்தேர்வு எழுதிட கூடுதலாக ஒரு மணிநேரம் வழங்கிட அனுமதிக்குமாறு அரசுத் தேர்வுகள் இயக்குநர் பார்வை 11ல் கண்ட கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பார்வை 11ல் படிக்கப்பட்ட அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்தது. இனி வருங்காலங்களில், அரசுத் தேர்வுத் துறையால் நடத்தப்படும் பொதுத் தேர்வுகளை எழுதும் பின்வரும் குறைப்பாடுள்ள தேர்வர்கட்கு கீழ்கண்டவாறு சலுகைகளை வழங்கலாம் என அரசு கருதி அவ்வாறே ஆணையிடுகிறது.

| வ. எண். | குறைப்பாட்டின் தன்மை | வழங்கப்படும் சலுகைகள் |
|---|---|---|
| I | கண் பார்வையற்றோர் | 1) தேர்வு எழுத சொல்வதை எழுதுபவர் நியமனம்.<br><br>2) தேர்வு எழுத கூடுதல் ஒரு மணி நேரம் |
| II | காது கேளாத மற்றும் வாய் பேச இயலாதோர். | 1) இருமொழிப் பாடங்களில் ஏதேனும் ஒரு மொழிப் பாடம் தேர்வு எழுத விலக்கு அளித்தல்.<br><br>2) தேர்வு எழுத கூடுதல் ஒரு மணி நேரம். |
| III | எதிர்பாராத விபத்துகளால் உடல் ஊனமுற்று தேர்வு எழுத இயலாதோர் பாரிச வாயு போன்ற நோயால் பாதிக்கப்பட்டோர் மற்றும் எதிர்பாராத விபத்தினால் கைமுறிவு ஏற்பட்டோர். | 1) தேர்வு எழுத சொல்வதை எழுதுபவர் நியமனம்.<br><br>2) தேர்வு எழுத கூடுதல் ஒரு மணி நேரம். |

| | | |
|---|---|---|
| IV | மனநலம் குன்றியோர் | 1)இருமொழிப் பாடங்களில் ஏதேனும் ஒரு மொழிப் பாடம் தேர்வு எழுத விலக்கு அளித்தல்.<br><br>2) தேர்வு எழுத கூடுதல் ஒருமணி நேரம். |
| V | டிஸ்லெக்சியா குறைபாடு | 1) தேர்வு எழுத கூடுதல் ஒரு மணி நேரம்.<br><br>2)கால்குலேட்டர் பயன்படுத்த அனுமதி.<br><br>3) கிளார்க் அட்டவணை பயன்படுத்த அனுமதி.<br><br>4) கேள்வித் தாளை படித்துக் காட்ட அல்லது சொல்வதை எழுத ஆசிரியரை நியமிக்க அனுமதி.<br>(இரண்டில் ஏதெனும் ஒரு சலுகை அன்னாரின் கோரிக்கைப்படி).<br><br>5) ஏதெனும் ஒரு மொழிப் பாடம் எழுதுவதிலிருந்து தவிர்ப்பு வழங்குதல்.<br><br>6) மொழி அல்லாத பிற பாடங்களை திருத்தும் போது எழுத்துப் பிழைக்கென மதிப்பெண் குறைக்காமல் பாடப் பொருளை மட்டும் கணக்கில் கொண்டு மதிப்பெண் அளித்தல். |

| | | |
|---|---|---|
| | | 7) பள்ளியில் முறையாக பயின்றோ அல்லது பள்ளியில் முறையாக பயிலாமல் தனிப்பட்ட முறையில் ஆசிரியரிடம் சிறப்பு பயிற்சி பெற்று தனித் தேர்வராக பொதுத் தேர்வு எழுத அனுமதித்தல். |
| VI | நரம்பியல் கோளாறு | டிஸ்லெக்சியா குறைபாடுகள் உள்ள தேர்வர்களுக்கு வழங்கிய சலுகைகளுடன் கணினி மற்றும் வரைபடம் பயன்படுத்த அனுமதி. |

4. மேற்கண்ட குறைபாடுள்ள தேர்வர்களுக்கு மேற்கண்ட சலுகைகளை வழங்குவதற்கு பின்வருமாறு நிபந்தனைகளை வகுத்தும் அரசு ஆணையிடுகிறது.

1) கண்பார்வையற்ற / கண்பார்வை குறைபாடுள்ள தேர்வர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசு கண்மருத்துவரிடம் (Opthomologist) தேர்வர் முழுவதும் கண்பார்வையில்லாதவர் அல்லது கண்பார்வை குறைபாடுள்ளவர்கள் (Partially Blind), அன்னாரால் படிக்க, எழுத இயலாது மற்றும் அன்னார் தேர்வு எழுத சொல்வதை எழுதுபவர் நியமனம் செய்திடல் அவசியம் என்ற சான்றிதழைப் பெற்று சமர்ப்பித்திடல் வேண்டும்.

2) காது கேளாத மற்றும் வாய்பேச இயலாத தேர்வர்கள் தங்களின் குறைபாட்டின் தன்மைக் குறித்து பதிவு செய்யப்பட்ட அரசு மருத்துவ அலுவலரால் (Civil Surgeon நிலையில் உள்ளவருக்கு குறையாமல்) அண்மையில் வழங்கப்பட்ட சான்றிதழ் பெற்று இருத்தல் வேண்டும். (ENT Specialist யிடமிருந்து சான்றிதழ் பெற்றிருப்பின் சாலச் சிறந்ததாகும்).

3) எதிர்பாராத விபத்துகளால் உடல் ஊனமுற்று தேர்வு எழுத இயலாதோர், பாரிச வாயு போன்ற நோய்களால் பாதிக்கப்பட்ட தேர்வர்கள் பதிவு பெற்ற அரசு மருத்துவரிடம் தக்க மருத்துவச் சான்றிதழ் பெற வேண்டும்.

4) மனநலம் குன்றிய தேர்வர்கள், அரசு மருத்துவ அலுவலரிடம் (Civil Surgeon நிலையில் உள்ளவருக்கு குறையாமல்) மனநலம் குன்றியதற்கான சான்றிதழ் பெற்றிடல் வேண்டும். (Neurology நிபுணரிடம் சான்றுப் பெற்றால் சாலச் சிறந்ததாகும்).

5) டிஸ்லெக்சியா குறைபாடு மற்றும் நரம்பியல் கோளாறு உள்ள மாணவர்களுக்கு அத்தகைய குறைபாடுகளுக்கான மருத்துவர்கள் / மனோதத்துவ நிபுணர்கள் அடங்கிய மருத்துவ குழு வழங்கும் சான்றிதழ், பாட ஆசிரியர்கள் மற்றும் சிறப்பு ஆசிரியர்களின் பரிந்துரை சான்றிதழ்களை பெற்றிடல் வேண்டும்.

6) பள்ளி மாணவர்களைப் பொறுத்தவரை, பள்ளித் தலைமை ஆசிரியர்கள், +2 தேர்வு எனில் முதன்மைக் கல்வி அலுவலருக்கும், பத்தாம் வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி) தேர்வு எனில் மாவட்டக் கல்வி அலுவலருக்கும், மெட்ரிக் மற்றும் ஆங்கிலோ இந்திய தேர்வு எழுதுவோர் மெட்ரிக் பள்ளி ஆய்வாளர் மற்றும் ஆங்கிலோ இந்தியன் பள்ளி ஆய்வாளருக்கும் மேற்குறிப்பிட்டவாறு அசல் சான்றிதழ்களை சமர்ப்பித்திடல் வேண்டும்.

7) ஈ.எஸ்.எல்.சி., மெட்ரிக், ஆங்கிலோ இந்தியன், எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலைப் பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்கும் தனித் தேர்வர்கள், தங்கள் விண்ணப்பங்களுடன் மேற்படி சான்றிதழ்களை இணைத்து அனுப்பிடல் வேண்டும்.

8) மேற்படி சலுகைகளைப் பெற தகுதி உள்ளவர்கள் உரிய சான்றிதழ்களை அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நிர்ணயிக்கப்படும் இறுதி நாளுக்குள் அவசியம் உரிய கல்வி அதிகாரிகளிடத்தில் சமர்ப்பித்திடல் வேண்டும்.

9) உடனடி அனுமதி திட்டத்தின் கீழ் விண்ணப்பிப்போருக்கு கால அவகாசத்தைக் கருத்தில் கொண்டு சொல்வதை எழுதுபவர் அல்லது வினாத்தாள் படிப்பவர் ஆகியோரை நியமனம் செய்ய இயலாத நிலை உள்ளதால் அச்சலுகை மட்டும் சிறப்பு அனுமதி (Takkal) திட்டத்தின் கீழ் விண்ணப்பிப்போருக்கு வழங்க இயலாது.

5. மேலும் உரிய நேரத்தில் விண்ணப்பிக்கும் டிஸ்லெக்சியா மற்றும் நரம்பியல் குறைபாடுள்ள தேர்வர்களுக்கு சொல்வதை எழுதுபவர் நியமனம் செய்யும் போது அவருக்கு நெருங்கிய/தெரிந்த நபரை நியமனம் செய்யக்கூடாது. பொதுவான நபரையே நியமனம் செய்திட வேண்டும். கணினி அவசியம் அனுமதிக்க வேண்டிய நேர்வில் மட்டும், அதுவும் தேர்வு மையத்தில் உள்ள கணினியை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

6. மேற்கண்ட பல்வேறு வகையான குறைபாடுள்ள தேர்வர்கட்கு மேற்குறிப்பிட்டவாறு சலுகைகளை உரிய மருத்துவரின் சான்றிதழ்களின் அடிப்படையிலும், உரிய காலவரையறைக்குள் விண்ணப்பிப்போருக்கும் அரசுத் தேர்வுகள் இயக்குநரே கூர்ந்தாய்வு செய்து, மேற்குறிப்பிட்டுள்ள சலுகைகளை வழங்கிட அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அதிகாரமளித்து அரசு ஆணையிடுகிறது.

7. மேலும் மேற்கண்ட குறைபாடுள்ள தேர்வர்களின் மதிப்பெண் சான்றிதழ்களில் ஊனத்தின் தன்மை மற்றும் வழங்கப்பட்ட சலுகை குறித்தான மேற்குறிப்பினை பதிந்து வழங்கிட அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது.

8. இவ்வரசாணையை அனைத்து ஆய்வு அலுவலர்களுக்கும் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை–6.
மெட்ரிக்குலேசன் பள்ளி இயக்குநர், சென்னை–6.
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர், சென்னை–6.
சமூக நலத்துறை இயக்குநர், சென்னை–5.
ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர், 15/1 மாதிரிப்பள்ளி ரோடு, சென்னை–6.

நகல்

சமூக நலத்துறை, சென்னை – 9.
சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, சென்னை – 9.
அமைச்சர் (பள்ளிக்கல்வி) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

11.2.2010
பிரிவு அலுவலர்.

## சுருக்கம்

பள்ளிக் கல்வி – இடைநிலை பள்ளி விடுப்புச் சான்றிதழ் / மேல்நிலை பொதுத் தேர்வு எழுதும் மாற்றுத் திறனாளிகளின் குறைபாடுகளுக்கேற்ப பல்வேறு சலுகைகள் வழங்கி அதற்கான நிபந்தனைகளை வகுத்து ஆணையிடப்பட்டது – திருத்தம் வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வி (வி1) துறை**

**அரசாணை (நிலை) எண் 2.**

நாள்: 07.01.2012.
திருவள்ளுவராண்டு 2042.

படிக்கப்பட்டவை.

1. அரசாணை (நிலை) எண் 28, பள்ளிக் கல்வித் துறை, நாள் 10.2.2010.
2. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதம் ந.க.எண்.043476/பி1/11, நாள் 29.9.2011.
3. Madras Dyslexia Association, T.Nagar, Chennai-17 கடித நாள் 29.6.2011.

---

**ஆணை :-**

அரசுத் தேர்வுகள் துறையால் நடத்தப்படும் மேல்நிலைத் தேர்வு, எஸ்.எஸ்.எல்.சி., ஓ.எஸ்.எல்.சி, மெட்ரிக், ஆங்கிலோ – இந்தியன் மற்றும் ஈ.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வுகளில், உடல் ஊனமுற்ற, கண்பார்வையற்ற, காது கேளாத மற்றும் வாய்பேச இயலாத, எதிர்பாராத விதமாக கைமுறிவு ஏற்பட்ட, மனவளர்ச்சி குன்றிய மற்றும் டிஸ்லெக்சியா குறைபாடுள்ள மாணவர்கட்கு தேர்வெழுத அவரவர்கள் குறைபாட்டின் தன்மைக்கேற்ப, தேர்வு எழுத சொல்வதை எழுதுபவர் நியமனம், தேர்வு எழுத கூடுதல் ஒரு மணி நேரம், இரு மொழிப் பாடங்களில் ஏதேனும் ஒரு மொழிப் பாடம் தேர்வு எழுத விலக்கு அளித்தல் போன்ற பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டும் இவ்வாறு வழங்கப்படும் சலுகைகள் மற்றும் அச்சலுகைகள் வழங்குவதற்கான நிபந்தனைகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண் 28, பள்ளிக் கல்வித் துறை, நாள் 10.2.2010ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதத்தில் மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் டிஸ்லெக்சியா மற்றும் நரம்பியல் கோளாறு உள்ள தேர்வர்களுக்கு பத்தி 4 (5)ல் வழங்கப்பட்ட நிபந்தனைக்கு திருத்தம் செய்து ஆணை வழங்குமாறு அரசை வேண்டியுள்ளார். அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்துருவினை ஏற்று மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணை பத்தி–4, (5)க்கு கீழ்க்கண்ட திருத்தம் வெளியிடப்படுகிறது :–

**திருத்தம்**

"டிஸ்லெக்சியா குறைபாடு மற்றும் நரம்பியல் கோளாறு உள்ள மாணவர்களுக்கு அத்தகைய குறைபாடுகளுக்கான அரசு மருத்துவர்கள் / மனோதத்துவ நிபுணர்கள் அடங்கிய அரசு மருத்துவக்குழு வழங்கும் சான்றிதழ், பாட ஆசிரியர்கள் மற்றும் சிறப்பு ஆசிரியர்களின் பரிந்துரைச் சான்றிதழ் அல்லது தன்னார்வ தொண்டு நிறுவனமான Madras Dyslexia Association வழங்கும் சான்றிதழ் பெற்று சமர்ப்பித்தல் வேண்டும்"

அரசாணையின் ஆங்கிலக் கூற்றின் பத்தி 4(5)க்கு கீழ்க்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது.

**Revised**

"The candidates having deficiency of dyslexia and neuroses problems should get a certificate from the Government Medical Council consisting of Doctors / Psychologist for the above said deficiencies and also a certificate from their teacher and Special Teachers or a certificate issued by Madras Dyslexia Association (Non Government Organization) recommending for the same."

(ஆளுநரின் ஆணைப்படி)

தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை–6.
மெட்ரிக்குலேசன் பள்ளி இயக்குநர், சென்னை–6.
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர்,
சென்னை–6.
சமூக நலத்துறை இயக்குநர், சென்னை–5.
ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர்,
15/1 மாதிரிப்பள்ளி ரோடு, சென்னை–6.

நகல்
சமூக நலத்துறை, சென்னை – 9.
சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, சென்னை – 9.
மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
Madras Dyslexia Association,
15 சாம்பசிவம் தெரு,
தி.நகர், சென்னை–17.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நடத்தப்படும் பொதுத் தேர்வுகளை எழுதும் மனநலம் குன்றிய மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்காக சலுகைகள் வழங்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள அரசாணைக்கு திருத்தம் – வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வி (வி1) துறை**

**அரசாணை (நிலை) எண் 268.**

**நாள்: 19.10.2012.**
**திருவள்ளுவராண்டு 2043.**

**படிக்கப்பட்டவை.**

1. அரசாணை (நிலை) எண் 28, பள்ளிக் கல்வி, நாள் 10.2.2010.
2. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க.எண்.014611/பி1/2012, நாள் 14.8.2012.

--------

**ஆணை :-**

அரசுத் தேர்வுகள் இயக்குநர், தனது கடிதத்தில் இடைநிலை மற்றும் மேல்நிலை பொதுத் தேர்வெழுதும் மனநலம் குன்றிய மாற்றுத் திறனாளி தேர்வர்களுக்கு தேர்வெழுத, இருமொழிப் பாடங்களில் ஏதேனும் ஒரு மொழிப்பாடம் தேர்வெழுத விலக்கும் மேலும், தேர்வு எழுத ஒரு மணி நேரம் கூடுதலாக அனுமதித்தும் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் திரு.அ.தாமோதரக்கண்ணன் என்பவரின் மகன் தா.அபிஷேக் என்பவர் மிதமான மூளை வளர்ச்சி குன்றியவர் (Mild Mental Retardation, IQ 55-69) அன்னார் மார்ச் 2011ல் மேற்காண் இரு சலுங்கைகள் மட்டுமே பெற்று இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வெழுதி கணித பாடங்களைத் தவிர மற்ற பாடங்களில் தேர்ச்சி பெற்றுள்ளார். கணிதப்பாடத்தை ஜுன் 2011 உடனடி சிறப்புத் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றுள்ளார். அன்னார் மார்ச் 2013ல் நடைபெறவுள்ள மேல்நிலைத் தேர்வில் தனித்தேர்வராக எழுதவிருப்பதால் தேர்வில் சொல்வதை எழுதுபவர் (Scribe) சலுகை பெற்றுத்தர கோரியுள்ளார். மிதமான மூளை வளர்ச்சி குன்றிய IQ Range குறைவாகவுள்ள மாற்றுத்திறனாளி தேர்வருக்கு மேற்குறிப்பிட்டுள்ள இரு சலுகைகள் மட்டுமே வழங்கப்படுகிறது. IQ Range அதிகமுள்ள Dyslexia தேர்வர்களுக்கு மேற்கண்ட சலுகைகளுடன், சொல்வதை எழுதுபவர் Scribe சலுகையும் வழங்கப்படுகிறது. எனவே, மனுதாரின் கோரிக்கையை ஏற்று அரசாணை (நிலை) எண் 28, பள்ளிக் கல்வி, நாள் 10.2.2010ல் பத்தி 3ல், வரிசை எண் IVல், மனநலம் குன்றிய தேர்வர்களுக்கு வழங்கியுள்ள இரு சலுகைகளுடன் மூன்றாவதாக சொல்வதை எழுதுபவர் (Scribe) சலுகையும் கூடுதலாக வழங்க ஏதுவாக அரசாணைக்கு திருத்தம் வழங்குமாறு அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலித்தது. அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நடத்தப்படும் பொதுத் தேர்வுகள் எழுதும் மனநலம் குன்றிய மாற்றுத்திறனாளி தேர்வர்களுக்காக பின்வரும் சலுகைகள் அரசாணை (நிலை) எண் 28, பள்ளிக் கல்வி, நாள் 10.2.2010ல் வழங்கப்பட்டுள்ளது:-

| | | |
|---|---|---|
| IV | மனநலம் குன்றியோர் | 1) இருமொழிப் பாடங்களில் ஏதேனும் ஒரு மொழிப் பாடம் தேர்வு எழுத விலக்கு அளித்தல்.<br>2) தேர்வு எழுத கூடுதல் ஒரு மணி நேரம். |

தற்போது இச்சலுகையுடன் தேவைப்படின் தேர்வர் கோரிக்கைக்கிணங்க சொல்வதை எழுதுபவர் (Scribe) சலுகையை கூடுதலாக சேர்த்து, அவ்வரசாணையில் பத்தி 4ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, அவ்வரசாணைக்கு திருத்தம் வெளியிடலாம் என அரசு முடிவு செய்து கீழ்கண்டவாறு திருத்தம் வழங்கி ஆணையிடப்படுகிறது.

## திருத்தம்

அரசாணை (நிலை) எண் 28, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள் 10.2.2010ல் வெளியிடப்பட்ட ஆணையில் பத்தி 3ல், வரிசை எண் IVல் மனநலம் குன்றியோருக்கு வழங்கப்பட்டுள்ள இருமொழிப் பாடங்களில் ஏதேனும் ஒரு மொழிப் பாடம் தேர்வு எழுத விலக்கு அளித்தல் மற்றும் தேர்வு எழுத கூடுதல் ஒரு மணி நேரம் ஆகிய இரு சலுகைகளுடன் மூன்றாவதாக கீழ்க்கண்ட சலுகையினையும் சேர்த்து வாசிக்கவும் :-

| | | |
|---|---|---|
| IV | மனநலம் குன்றியோர் | 3) சொல்வதை எழுதுபவர் (Scribe) |

3. மேற்காண் மூன்றாவது சலுகை வழங்குவதற்கும், அரசாணை (நிலை) எண் 28, பள்ளிக் கல்வித் துறை, நாள் 10.2.2010ல் பத்தி 4ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை–6.
மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6.
மாநில கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவன இயக்குநர், சென்னை–6.
சமூக நலத்துறை இயக்குநர், சென்னை–5.
ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர், 15/1 மாதிரிப்பள்ளி ரோடு, சென்னை–6.

நகல்
சமூக நலத்துறை, சென்னை – 9.
சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, சென்னை – 9.
அமைச்சர் (பள்ளிக்கல்வி) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரி.

1580

JD/ A&B Supdt
7/4/2022

சுருக்கம்

பள்ளிக் கல்வி - அரசுத் தேர்வுகள் இயக்ககம் - மேல்நிலை / இடைநிலை / எட்டாம் வகுப்பு (தனித்தேர்வர்) / தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வு மற்றும் தொழில்நுட்பத்தேர்வு ஆகிய பொதுத்தேர்வுகள் எழுதும் மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு மத்திய கல்வி வாரியத்தால் வழங்கப்படும் சலுகைகள் போன்று சலுகைகள் வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வி(அ.தே.)த்துறை

அரசாணை(நிலை) எண்.62

நாள் : 25.03.2022
திருவள்ளுவர் ஆண்டு 2053
பிலவ வருடம், பங்குனி - 11
படிக்கப்பட்டவை:

1. அரசுக் கடித எண்.8244/வி1/2006-2, நாள் 18.04.2006
2. அரசாணை (நிலை) எண்.28, ப.க(வி1)த்துறை, நாள் 10.02.2010
3. அரசாணை (நிலை) எண்.2, ப.க(வி1)த்துறை, நாள் 07.01.2012
4. அரசாணை (நிலை) எண்.23, ப.க(வி1)த்துறை, நாள் 11.02.2013
5. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களின் கோ.எண்.004493/LO/2021-ல் பிறப்பிக்கப்பட்ட 09.07.2021-ம் நாளிட்ட நீதிமன்ற ஆணை
6. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க.எண்.100864/எப்1.2021, நாள் 12.08.2021 (ம) 04.01.2021.
7. மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர் அவர்களின் கடித Rc. எண்.2277/B2/2021, நாள் 17.09.2021
8. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க.எண்.029382/அ5/இ4/2021, நாள் 23.09.2021

----------------

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கத் தேவை ஏற்படாத பாடங்களை தேர்ந்தெடுத்து படிக்க ஊக்குவிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளுமாறு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

2. மேலே இரண்டாவது மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள, ஆறு வகையான மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு மட்டும் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நடத்தப்படும் தேர்வுகளில் சொல்வதை எழுதுபவர், கூடுதல் ஒரு மணி நேரம்,

மொழிப்பாட விலக்கு உள்ளிட்ட சலுகைகள் வழங்கி, ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன:

i. கண் பார்வையற்றோர்

ii. காது கேளாத மற்றும் வாய் பேச இயலாதோர்,

iii. எதிர்பாராத விபத்துகளால் உடல் ஊனமுற்று தேர்வு எழுத இயலாதோர், பாரிச வாயு போன்ற நோயால் பாதிக்கப்பட்டோர் மற்றும் எதிர்பாராத விபத்தினால் கைமுறிவு ஏற்பட்டோர்

iv. மனநலம் குன்றியோர்

v. டிஸ்லெக்சியா குறைபாடுடையோர்,

vi. நரம்பியல் குறைபாடுடையோர்

3. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பத்தாம் வகுப்பு செய்முறைத் தேர்வு விலக்கு கோரும் மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு மட்டும் செய்முறைத் தேர்வு விலக்கு சலுகை வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேல்நிலைத் தேர்வெழுதும் மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு செய்முறைத் தேர்வு விலக்கு வழங்கப்படுவதில்லை என்ற காரணத்தால், பார்வையற்றோருக்கான தேசிய சங்கத்தின் தமிழ்நாடு கிளையால், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் நீதிமன்றத்தால் மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு தேர்வெழுதும் மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு செய்முறைத் தேர்வின் போது, ஆய்வக உதவியாளரை நியமனம் செய்வது தொடர்பாக தேவையான விதிமுறைகளை வகுக்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

5. மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், மேல்நிலை / இடைநிலை / எட்டாம் வகுப்பு (தனித்தேர்வர்) / தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வு மற்றும் தொழில்நுட்ப தேர்வு ஆகிய பொதுத்தேர்வுகளை எழுதும் மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு மாற்றுத் திறனாளிகள் உரிமைச் சட்டம் 2016-ன்படி, மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் அலுவலகக் குறிப்பில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதலைப் பின்பற்றி, மத்திய பள்ளிக் கல்வி வாரியத்தால் (CBSE) வழங்கப்படுவதைப் போன்று, மாநில பொதுத் தேர்வெழுதும் அனைத்து மாற்றுத் திறனாளி தேர்வர்களுக்கும் அவர்களுடைய குறைபாட்டின் தன்மைக்கேற்ப நிபந்தனைகளுடன் கூடிய சலுகைகளை பட்டியலிட்டு, இனி வருங்காலங்களில் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் பொதுத்தேர்வுகள் நடத்தப்படும் போது வழங்கலாம் என தெரிவித்து அதன்மீது அரசுத் தேர்வுகள் இயக்குநர் ஆணை வேண்டியுள்ளார். இதனையே மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்வி ஆணையர் ஆகியோர் மேலே 7-வது மற்றும் 8-வதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் பரிந்துரை செய்துள்ளனர்.

6. பள்ளிக்கல்வி ஆணையர் மற்றும் மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர் ஆகியோரின் பரிந்துரையுடன் பெறப்பட்ட அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கோரிக்கையினை பரிசீலித்த அரசு, அதனை ஏற்று, மாற்றுத் திறனாளிகள் உரிமைச் சட்டம் 2016 மற்றும் மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் வழிகாட்டுதல் ஆகியவற்றை பின்பற்றி, மத்திய பள்ளிக் கல்வி வாரியத்தால் (CBSE) மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளைப் போன்று, இனி வருங்காலங்களில் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நடத்தப்படும் நடைமுறையில் உள்ள மேல்நிலை / இடைநிலை / எட்டாம் வகுப்பு (தனித்தேர்வர்) ஆகிய பொதுத்தேர்வுகள் மற்றும் தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வு, தொழில்நுட்ப தேர்வுகள் ஆகியவற்றை எழுதும் இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு அவர்களுடைய குறைபாட்டின் தன்மைக்கேற்ப குறிப்பிடப்பட்டுள்ள சலுகைகளை, வழங்கி பொதுத்தேர்வுகள் நடத்திட அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுமதி வழங்கி ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை - 6.
மெட்ரிகுலேஷன் பள்ளி இயக்குநர்,
சென்னை -6.
பள்ளிக் கல்வி ஆணையர்,
சென்னை -6.
மாற்றுத் திறனாளி நல இயக்குநர்,
சென்னை - 5

<u>நகல்</u>

மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -9
மாற்றுத் திறனாளி நலத்துறை,
சென்னை - 9
இருப்புக்கோப்பு / உதிரி கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

25-3-22

பிரிவு அலுவலர்

25-3-22

<u>அரசாணை(நிலை)எண்.62, ப.க(அ.தே)த்துறை, நாள் 25.03.2022-ன் இணைப்பு</u>

| வ. எ ண் | குறைபாட்டின் தன்மை | குறைபாட்டிற்கான குறியீடு | ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் சலுகைகள் | மத்திய பள்ளிக் கல்வி வாரியத்தைப் பின்பற்றி வழங்க பரிந்துரைக்கும் சலுகைகள் |
|---|---|---|---|---|
| 01 | உடல் குறைபாடு – உடல் இயக்கக் குறைபாடு (Physical Disability - Locomotor Disability) | LD | **எதிர்பாராத விபத்துக்களால் உடல் ஊனமுற்று தேர்வு எழுத இயலாதோர், பாரிச வாயு போன்ற நோயால் பாதிக்கப்பட்டோர் மற்றும் எதிர்பாராத விபத்தினால் கைமுறிவு ஏற்பட்டோர்**<br>1. தேர்வெழுத சொல்வதை எழுதுபவர் நியமனம்.<br>2. தேர்வெழுத கூடுதல் ஒரு மணிநேரம்.<br>3. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி. | 1. ஏதேனும் ஒரு மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து விலக்கு<br>2. சொல்வதை எழுதுபவர் நியமனம் (கை செயலிழப்பு ஏற்பட்டவர்களுக்கு மட்டும்)<br>3. ஈடுசெய் நேரம் (Compensatory Time)<br>4. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி<br>5. செய்முறை தேர்வின்போது ஆய்வக உதவியாளர் நியமனம்<br><u>குறிப்பு:</u><br>மத்தியப் பள்ளிக் கல்வி வாரியத்தால் நடத்தப்படும் தேர்வுகளுக்கு ஆய்வக உதவியாளர் நியமன சலுகை வழங்கப்படவில்லை .இருப்பினும், 29.08.2018 நாளிட்ட மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் அலுவலகக்குறிப்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு தேர்வுகளின் போது சலுகை வழங்குதல் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதலைப் பின்பற்றி, ஆய்வக உதவியாளர் நியமனம் செய்யலாம்.<br>6. மருத்துவரின் பரிந்துரையின் படி தேர்வெழுதும் போது தேவைப்படும் சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி. |
| | i. உடல் இயக்கக் குறைபாடு (Locomotor Disability) | | | |
| | ii. தொழுநோயிலிருந்து குணமடைந்தோர் (Leprosy Cured) | LC | | |
| | iii. மூளை முடக்குவாத பாதிப்பு (Cerebral Palsy) | CP | | |
| | iv. குள்ளத்தன்மை (Dwarfism) | DWF | | |
| | v. தசைச் சிதைவு நோய் (Muscular Dystrophy) | MUD | | |
| | vi. அமில வீச்சால் பாதிக்கப்பட்டோர் (Acid Attack Victims) | AC | | |
| 02. | உடல் குறைபாடு – பார்வைக் குறைபாடு (Physical Disability - Visual Impairment) | | **கண் பார்வையற்றோர்**<br>1. தேர்வெழுத சொல்வதை எழுதுபவர் நியமனம்.<br>2. தேர்வெழுத கூடுதல் ஒரு மணிநேரம்.<br>3. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி.<br>4. தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு. | 1. ஏதேனும் ஒரு மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து விலக்கு<br>2. சொல்வதை எழுதுபவர் நியமனம்<br>3. ஈடுசெய் நேரம் (Compensatory Time)<br>4. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி.<br>5. **செய்முறை தேர்வின்போது ஆய்வக உதவியாளர் நியமனம்**<br>6. மருத்துவரின் பரிந்துரையின்படி தேர்வெழுதும் போது தேவைப்படும் சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி.<br>7. தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு. |
| | i. கண் பார்வையின்மை (Blindness) | VI | | |
| | ii. பார்வைக் குறைபாடு (Low Vision) | LV | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 03. | உடல் குறைபாடு - செவித்திறன் குறைபாடு (Physical Disability - Hearing Impairment) | | **காது கேளாத மற்றும் வாய் பேச இயலாதோர்**<br>1. இரு மொழிப் பாடங்களில் ஏதேனும் ஒரு மொழிப்பாடம் தேர்வு எழுத விலக்கு அளித்தல்.<br>2. தேர்வெழுத கூடுதல் ஒரு மணிநேரம்.<br>3. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி.<br>4. தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு. | 1. ஏதேனும் ஒரு மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து விலக்கு<br>2. ஈடுசெய் நேரம் (Compensatory Time)<br>3. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி.<br>4. **செய்முறை தேர்வின்போது ஆய்வக உதவியாளர் நியமனம்**<br>5. மருத்துவரின் பரிந்துரையின்படி தேர்வெழுதும் போது தேவைப்படும் சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி.<br>6. தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு. |
| | i. காது கேளாமை (Deafness) | HI | | |
| | ii. செவித்திறன் குறைபாடு (Hard of Hearing) | HH | | |
| 04. | உடல் குறைபாடு - பேச்சு மற்றும் மொழித்திறன் குறைபாடு (Physical Disability - Speech and Language Disability) | SPLAND | **காது கேளாத மற்றும் வாய் பேச இயலாதோர்**<br>1. இரு மொழிப் பாடங்களில் ஏதேனும் ஒரு மொழிப்பாடம் தேர்வு எழுத விலக்கு அளித்தல்.<br>2. தேர்வெழுத கூடுதல் ஒரு மணிநேரம்.<br>3. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி.<br>4. தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு. | 1. ஏதேனும் ஒரு மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து விலக்கு<br>2. சொல்வதை எழுதுபவர் (அல்லது) வினாத்தாள் வாசிப்பவர் நியமனம்<br>3. ஈடுசெய் நேரம் (Compensatory Time)<br>4. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி.<br>5. மருத்துவரின் பரிந்துரையின்படி தேர்வெழுதும் போது தேவைப்படும் சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி.<br>6. தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு. |
| 05. | அறிவு சார் குறைபாடு (Intellectual Disability) | ID | டிஸ்லெக்சியா குறைபாடு<br>1. தேர்வெழுத கூடுதல் ஒரு மணி நேரம்<br>2. கால்குலேட்டர் பயன்படுத்த அனுமதி.<br>3. கிளார்க் அட்டவணை பயன்படுத்த அனுமதி.<br>4. கேள்வித்தாளை | 1. ஏதேனும் ஒரு மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து விலக்கு<br>2. சொல்வதை எழுதுபவர் (அல்லது) வினாத்தாள் வாசிப்பவர்(அல்லது) Adult Prompter நியமனம்<br>3. ஈடுசெய் நேரம் (Compensatory Time) |
| | i. அறிவு சார் குறைபாடு (Intellectual Disability) | SLD | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | ii குறிப்பிட்ட கற்றல் குறைபாடு (Specific Learning Disability)<br>• படிக்க இயலாமை (Dyslexia)<br>• எழுத<br>• முடியாமை (Dysgraphia)<br>• கணிதக் குறைபாடு (Dyscalculia)<br>• செயல் திறன் குன்றல் (Dyspraxia)<br>Developmental Aphasia | CA | படித்துக்காட்ட அல்லது சொல்வதை எழுத ஆசிரியரை நியமிக்க அனுமதி (இரண்டில் ஏதேனும் ஒரு சலுகை அன்னாரின் கோரிக்கை படி).<br>5. ஏதேனும் ஒரு மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து தவிர்ப்பு வழங்குதல்.<br>6. மொழி அல்லாத பிற பாடங்களை திருத்தும் போது எழுத்து பிழைக்கென மதிப்பெண் குறைக்காமல் பாடப் பொருளை மட்டும் கணக்கில் கொண்டு மதிப்பெண் அளித்தல்.<br>7. பள்ளியில் முறையாக பயின்றோ அல்லது பள்ளியில் முறையாக பயிலாமல் தனிப்பட்ட முறையில் ஆசிரியரிடம் சிறப்பு பயிற்சி பெற்ற தனித் தேர்வராக பொதுத் தேர்வு எழுத அனுமதித்தல்.<br>8. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி. | 4. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி.<br>5. கணிதக் குறைபாடு (Dyscalculia) உள்ளவர்களுக்கு மட்டும் தேர்வின் போது கணிப்பான்(Calculator) பயன்படுத்த அனுமதி |
| | iii புற உலக சிந்தனை குறைபாடு (Autism Spectrum Disorder) | | | |
| 06. | மனநலம் சார்ந்த குறைபாடு - மனநலம் பாதிப்பு (Mental Behaviour -Mental illness) | ID | **மனநலம் குன்றியோர்**<br>1. இருமொழிப் பாடங்களில் ஏதேனும் ஒரு மொழிப் பாடம் தேர்வு எழுத விலக்கு அளித்தல்.<br>2. தேர்வெழுத கூடுதல் ஒரு மணிநேரம்<br>3. தேர்வெழுத சொல்வதை எழுதுபவர் நியமனம்.<br>4. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி. | 1. ஏதேனும் ஒரு மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து விலக்கு<br>2. சொல்வதை எழுதுபவர் (அல்லது) வினாத்தாள் வாசிப்பவர் (அல்லது) Adult Prompter நியமனம்<br>3. ஈடுசெய் நேரம் (Compensatory Time)<br>4. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி. |
| 07 | நாள்பட்ட நரம்பியல் குறைபாடுகள் (Disability caused due to Chronic Neurological Conditions) | | **நரம்பியல் கோளாறு**<br>1. தேர்வெழுத கூடுதல் 1 மணி நேரம்.<br>2. கால்குலேட்டர் பயன்படுத்த அனுமதி. | 1. ஏதேனும் ஒரு மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து விலக்கு<br>2. சொல்வதை எழுதுபவர் (அல்லது) வினாத்தாள் வாசிப்பவர் (அல்லது) Adult |

| | | | | |
|---|---|---|---|---|
| | i. நாள்பட்ட நரம்பியல் குறைபாடு (Chronic Neurological Conditions) | CNC | 3. கிளார்க் அட்டவணை பயன்படுத்த அனுமதி.<br>4. கேள்வித்தாளை படித்துக்காட்ட அல்லது சொல்வதை எழுத ஆசிரியரை நியமிக்க அனுமதி (இரண்டில் ஏதேனும் ஒரு சலுகை அன்னாரின் கோரிக்கை படி).<br>5. ஏதேனும் ஒரு மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து தவிர்ப்பு வழங்குதல்.<br>6. மொழி அல்லாத பிற பாடங்களை திருத்தும் போது எழுத்து பிழைக்கென மதிப்பெண் குறைக்காமல் பாடப் பொருளை மட்டும் கணக்கில் கொண்டு மதிப்பெண் அளித்தல்.<br>7. பள்ளியில் முறையாக பயின்றோ அல்லது பள்ளியில் முறையாக பயிலாமல் தனிப்பட்ட முறையில் ஆசிரியரிடம் சிறப்பு பயிற்சி பெற்ற தனித் தேர்வராக பொதுத் தேர்வு எழுத அனுமதித்தல்.<br>8. கணினி மற்றும் வரைபடம் பயன்படுத்த அனுமதித்தல்<br>9. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி. | Prompter நியமனம்<br>3. ஈடுசெய் நேரம் (Compensatory Time)<br>4. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி.<br>5. மருத்துவரின் பரிந்துரையின்படி தேர்வெழுதும் போது தேவைப்படும் சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி |
| | ii. தண்டுவட மரப்பு நோய் (Multiple Sclerosis) | MS | | |
| | iii. நடுக்கு வாதம் (Parkinson's Disease) | PD | | |
| | iv. குருதி உறையாமை (Haemophilia) | HE | | |
| | v. இரத்த அழிவு சோகை (Thalassemia) | | | |
| | vi. அரிவாளணு இரத்த சோகை (Sickle Cell Disease) | SCD | | |
| 08. | பன்முகக் குறைபாடுகள் (பார்வையின்மையோடு செவித்திறன் குறைபாடு உட்பட) (Multiple Disabilities including Deafblindness) | MD | --- | 1. ஏதேனும் ஒரு மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து விலக்கு<br>2. சொல்வதை எழுதுபவர் நியமனம்<br>3. ஈடுசெய் நேரம் (Compensatory Time)<br>4. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி |

I. **தேர்வெழுதும் போது வழங்கப்படும் சலுகைகள் குறித்த கூடுதல் விவரங்கள்**

i. ஈடுசெய்நேரம்

மாற்றுத்திறனாளிகள் தேர்வெழுதும் நேரம் 3 மணி நேரம் எனில், ஈடுசெய்நேரம் 60 நிமிடங்கள் எனவும், 2½ மணி நேரம் எனில் ஈடுசெய்நேரம் 50 நிமிடங்கள் எனவும் ஒவ்வொரு 1 மணி நேரத்திற்கும் 20 நிமிடங்கள் என்ற வீதத்தில் ஈடுசெய் நேரம் வழங்கப்படும்.

II. **சொல்வதை எழுதுபவர் / Prompter / வினாத்தாள் வாசிப்பவர் / ஆய்வக உதவியாளர் நியமனம்:-**

- மாற்றுத் திறனாளித் தேர்வர்கள் விருப்பத்தின் பேரில் தங்களுக்கு தெரிந்த நபரையோ அல்லது கல்வித் துறையால் நியமிக்கப்படும் நபரையோ சொல்வதை எழுதுபவராக (Scribe) / Prompter/ வினாத்தாள் வாசிப்பவராக / ஆய்வக உதவியாளராக நியமனம் செய்யக் கோரலாம்.
- தேர்வருக்கு தெரிந்த நபர் சொல்வதை எழுதுபவராக (Scribe) நியமிக்கப்படும் நேர்வுகளில், சொல்வதை எழுதுபவரின் கல்வித் தகுதி தேர்வெழுதும் வகுப்பிற்கான கல்வித் தகுதியை விட சற்றுக் குறைவாக இருத்தல் வேண்டும்.
- கல்வித்துறையால் நியமனம் செய்யப்படும் சொல்வதை எழுதுபவர் (Scribe) / Prompter/ வினாத்தாள் வாசிப்பவர் / ஆய்வக உதவியாளர், அரசாணை (நிலை) எண் 54, பள்ளிக் கல்வி (ஜிஇ1) துறை, நாள் 29.02.2016-ல் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி நியமனம் செய்யப்படுவார்.
- செய்முறைத் தேர்விற்கு ஆய்வக உதவியாளராக நியமனம் செய்யப்படும் நபர் சம்பந்தப்பட்ட பாடத்தில் இளநிலை பட்டம் பெற்ற பட்டதாரி ஆசிரியராக இருப்பார்.

III. **செய்முறைத் தேர்விற்கான சலுகை**

i. பத்தாம் வகுப்பு செய்முறைத் தேர்வு

- அரசாணை (நிலை) எண்.23, , பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள்.11.02.2013-ன் படி, பத்தாம் வகுப்பு தேர்வெழுதும் மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு மட்டும் செய்முறைத் தேர்வு விலக்கு அளிக்கும் நடைமுறையினை தொடர்ந்து பின்பற்றலாம்.

ii. மேல்நிலை வகுப்பு செய்முறைத் தேர்வு

- மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகளை எழுதும் உடல் இயக்கக் குறைபாடு, பார்வைக் குறைபாடு மற்றும் செவித்திறன் குறைபாடுள்ள மாற்றுத்

திறனாளித் தேர்வர்களது விருப்பத்தின் பேரில், செய்முறை தேர்வின் போது ஆய்வக உதவியாளர் நியமனம் செய்யப்படுவார்.

- உடல் இயக்கக் குறைபாடு, பார்வைக் குறைபாடு மற்றும் செவித்திறன் குறைபாடுள்ள மாற்றுத் திறனாளித் தேர்வர்களது விருப்பத்தின் பேரில், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியியல் பாடங்களில் மட்டும், செய்முறைத் தேர்வுக்கு பதிலாக செய்முறை தொடர்பான கொள்குறி வகை வினாக்கள் (Multiple Choice Questions) அடங்கிய வினாத்தாட்கள் வழங்கப்படும்.

IV. <u>தேர்வெழுதும் போது அனுமதிக்கப்படும் சாதனங்கள்</u>

- மருத்துவரின் பரிந்துரையின்படி உருப்பெருக்கி, சிறிய வீடியோ உருப்பெருக்கி (Portable Video Magnifier), பேசும் கணிப்பான் (Talking Calculator), பிரெய்லி வரைபடம், டெய்லர் பலகை (Tailor Frame), அபாகஸ் போன்ற சாதனங்களைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்படும். அவசியம் கணினி அனுமதிக்க வேண்டிய நேர்வில் மட்டும், அதுவும் தேர்வு மையத்தில் உள்ள கணினியை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

V. <u>தேர்வுக் கட்டண விலக்கு:-</u>

- அரசாணை (நிலை) எண்.2194, பள்ளிக் கல்வித் துறை, நாள்.10.10.1980 மற்றும் அரசாணை (நிலை) எண்.131, பள்ளிக் கல்வித் துறை, நாள்.24.01.1980-ன் படி கண்பார்வையற்றோர் மற்றும் காது கேளாத மற்றும் வாய் பேச இயலாத மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு தேர்வுக் கட்டண விலக்கு வழங்கப்படும் நடைமுறையினைத் தொடர்ந்து பின்பற்றலாம்.

<u>மேற்கண்ட குறைபாடுள்ள தேர்வர்கள் மேற்காண் சலுகைகளை பெறுவதற்கு பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள்</u>

- பார்வையின்மை / பார்வைத் திறன் குறைபாடுள்ள தேர்வர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசு கண்மருத்துவரிடம் (Opthomologist) உரிய மருத்துவச் சான்றிதழைப் பெற்று சமர்ப்பித்திடல் வேண்டும்.
- செவித்திறன் குறைபாடு / பேச்சு மற்றும் மொழித்திறன் குறைபாடுள்ள தேர்வர்கள் தங்களின் குறைபாட்டின் தன்மை குறித்து, பதிவு செய்யப்பட்ட காது, மூக்கு மற்றும் தொண்டை நிபுணர் (ENT Specialist) அல்லது அரசு மருத்துவ அலுவலரால் (Civil Surgeon நிலையில் உள்ளவருக்கு குறையாமல்) அண்மையில் வழங்கப்பட்ட மருத்துவச் சான்றிதழைப் பெற்று இருத்தல் வேண்டும்.
- உடல் இயக்கக் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட தேர்வர்கள் பதிவு பெற்ற அரசு மருத்துவரிடம் தக்க மருத்துவச் சான்றிதழை பெற்றிடல் வேண்டும்.

- மனநலம் பாதிக்கப்பட்ட தேர்வர்கள், நரம்பியல் நிபுணர் (Neurologist) அல்லது அரசு மருத்துவ அலுவலரிடம் (Civil Surgeon நிலையில் உள்ளவருக்கு குறையாமல்) மனநலம் குன்றியதற்கான சான்றிதழைப் பெற்றிடல் வேண்டும்.
- அறிவுசார் குறைபாடு / குறிப்பிட்ட கற்றல் குறைபாடு / நரம்பியல் குறைபாடு உள்ள மாணவர்களுக்கு அத்தகைய குறைபாடுகளுக்கான மருத்துவர்கள் / மனோதத்துவ நிபுணர்கள் அடங்கிய மருத்துவ குழு வழங்கும் சான்றிதழைப் பெற்றிடல் வேண்டும்.
- குறிப்பிட்ட கற்றல் குறைபாடு உள்ள தேர்வர்கள், தேசிய அளவில் அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் அல்லது தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல ஆணையகத்தில் அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் வழங்கும் சான்றிதழை சமர்ப்பித்தும் தேர்வெழுத சலுகை கோரி விண்ணப்பிக்கலாம்.
- மாற்றுத் திறனாளிகளுக்கான Unique Disability Identity Card-ன் நகலை சமர்ப்பித்தும் தேர்வெழுத சலுகை கோரி விண்ணப்பிக்கலாம். பள்ளி மாணவர்களைப் பொறுத்தவரை, தேர்வெழுத சலுகை கோரும் விண்ணப்பத்துடன் மருத்துவச் சான்றிதழினை இணைத்து அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நிர்ணயிக்கப்படும் கால வரையறைக்குள், பள்ளித் தலைமை ஆசிரியர்கள் வாயிலாக +2 மாணவர்கள் எனில் முதன்மைக் கல்வி அலுவலருக்கும், பத்தாம் வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி) மாணவர்கள் எனில் மாவட்டக் கல்வி அலுவலருக்கும் சமர்ப்பித்திடல் வேண்டும்.
- தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வெழுத சலுகை கோரும் விண்ணப்பத்துடன் மருத்துவச் சான்றிதழினை இணைத்து அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நிர்ணயிக்கப்படும் கால வரையறைக்குள், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வரிடம் சமர்ப்பித்திடல் வேண்டும்.
- எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைப் பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்கும் தனித் தேர்வர்கள், சேவை மையத்தில் தேர்வெழுத விண்ணப்பிக்கும் பொழுது, தேர்வெழுத சலுகை கோரும் விண்ணப்பம் மற்றும் மருத்துவச் சான்றிதழினை சேவை மையத்தில் வழங்குதல் வேண்டும்.

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

25-3-22

பிரிவு அலுவலர்.

25-03-22